இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மானிடமகன் வருகையைப்பற்றி இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது: “கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அடையாளங்கள் தென்படும். மண்ணுலகில் மக்களினங்கள் கடலின் கொந்தளிப்பின் முழக்கத்தினால் கலங்கி, என்ன செய்வதென்று தெரியாது குழப்பம் அடைவார்கள். உலகிற்கு என்ன நேருமோ என எண்ணி மனிதர் அச்சத்தினால் மயக்கமுறுவர். ஏனெனில், வான்வெளிக் கோள்கள் அதிரும். அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதை அவர்கள் காண்பார்கள். (லூக்கா 21:25-27)

# நற்செய்தியே வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்க உதவுகிறது!

## ஏழைகளின் மனித, ஆன்மீக வளர்ச்சியில் உடனிருங்கள்!

**வத்திக்கான்:** நற்செய்தியை நம் வாழ்வின் மையமாகக் கொண்டு, உடன் பிறந்த உணர்வுடன் கூடிய அன்பில் அதற்கு சான்று பகரும்போது, வருங்காலத்தை நம் மால் நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியும் என நவம்பர் 22ம் தேதி திங்கட்கிழமை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

'நாம் நம் வாழ்வின் மையமாக நற்செய்தியை வைத்து, உடன்பிறந்த உணர்வுடன் கூடிய அன்பில் அதற்கு சான்று பகரும்போது, இன்று நாம் எதிர்நோக்கும் அனைத்து விதமான, சிறிய மற்றும் பெரிய புயல்களையும் தாண்டி, வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உதவும்' என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும் அன்பு, மகிழ்ச்சியும் துயரமும் அடைகின்ற நேரங்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நவம்பர் 23, கடந்த செவ்வாயன்று, தன் டுவிட்டர் வலைப்பக்கத்தில் வெளியிட்ட குறுஞ்செய்தியில் தெளிவுப் படுத்தியுள்ளார்.

அன்பு, மற்றவரின் வளர்ச்சியைக் காணும்போது அகமகிழும் மற்றும், தனிமையிலும், நோயிலும், வீடற்றும், வெறுத்து ஒதுக்கப்படுகையிலும், தேவையின் நெருக்கடியிலும் மற்றவர் இருக்கும்போது துயருறும் என்று எழுதியுள்ள திருத்தந்தை, அன்பு, இதயத்தைத் துடிக்கச்செய்யும் எனவும், அது பகிர்வு மற்றும் ஒருங்கிணைப்பு, ஆகியவற்றின் பிணைப்புகளை உருவாக்கும் எனவும் எடுத்துரைக்கிறார்.

மேலும், அன்பு ஒருவரை அவரது கவலைகள், ஏக்கங்கள் போன்றவற்றினின்று வெளியேறச் செய்து, மற்றவரின் நிலைகளைப் புரிந்து கொள்ளச் செய்யும் என்றும் திருத்தந்தை விளக்கினார்.




இன்னும், நவம்பர் 22, திங்கள் மாலையில், உரோம் நகரில், இத்தாலிய ஆயர்களின் 75வது சிறப்பு ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கிவைத்து, நல்ல ஆயர் என்ற திருவுருவப் படத்தையும், “ஆயரின் நற்பேறுகள்” என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றையும், ஆயர்களுக்கு வழங்கி, அவர்களின் பணிகளை ஊக்கப்படுத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

தொடர்ந்து, மற்றொரு சூழலில் முரண்பாடுகள், மற்றும், பல்வேறு வகையான புறக்கணிப்புக்களால் நிறைந்துள்ள இன்றைய உலகில், ஒவ்வொரு மனிதருக்கும் மாண்புள்ள ஒரு வாழ்வை உறுதி செய்யும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப் படுவதற்கு உழைக்குமாறு, பிறரன்பு அருட் சகோதரிகள் சபை ஒன்றிடம் கேட்டுக் கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

பிரான்ஸ் நாட்டு பாரிஸ் நகரில், புனித வின்சென்ட் தெ பவுல் அவர்கள் துவக்கிய பிறரன்பின் மகள்கள் என்ற அருட் சகோதரிகள் சபையினர் மேற்கொண்டு வரும் பொதுப்பேரவையை முன்னிட்டு அனுப்பியுள்ள காணொளிச் செய்தியில், மேற்கண்டவாறு அழைப்புவிடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வன்முறை, பாகுபாடுகள், உரிமை மீறல்கள் போன்றவற்றிற்குப் பலியாவோரை, புன்னகையோடும், அர்ப்பணத்தோடும் பராமரித்துவரும் இச்சகோதரிகளைப் பாராட்டியுள்ள அதேவேளை, நம் பொதுவான இல்லத்தைப் பாதுகாக்கவும், கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும், கிறிஸ்தவ விழுமியங்களை, புதிய தலைமுறைக்கு வழங்கவும், ஒருவர் ஒருவர் மீது அக்கறை காட்டவும், அவர்களுக்குக் கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

*மேரி தெரேசா: வத்திக்கான்* ***செய்திகள்***



# அருள்பணி டாக்டர் ஜோன் ஞானபிரகாசம் மலேசிய மண்ணின் ‘ஞான ஒளி’ மறைந்தது!

பினாங்கு குருத்துவக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மேய்ப்புப் பணி கழகத்தின் இயக்குனருமான அருள் பணி டாக்டர் ஜோன் ஞானபிரகாசம் அவர்கள் தமது 77-வது அகவையில் மாரடைப்பால் இயற்கை எய்தினார். மலேசிய திருஅவையில், குறிப்பாக கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் அவரது திருப்பணி அளப்பரியது.

1944-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 30-ம் நாள் பிறந்த இவர், 27-வது வயதிலேயே, குடும்பத்தில் இரண்டாவது அருள்பணியாளராக தமது மூத்த சகோதரர் Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களைத் தொடர்ந்து அருள்பொழிவு கண்டார்.

அக்காலத்தில் பிரான்சு நாட்டு குருக்களால் வழிநடத்தப்பட்ட பினாங்கு குருத்துவக் கல்லூரியில் இவர் பயின்றதால் கத்தோலிக்க இறையியலில் அதிக ஆர்வம் காட்டினார். அதே காலக்கட்டத்தில்தான் 1965-ல் முடிவுற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஏடுகளும் வெளிவந்து கொண்டிருந்தன. திருவழிபாடு, திருஅவையில் மறுமலர்ச்சி, பிரிந்த கிறிஸ்தவ சபைகளிலுடனான உரையாடல், உலகில் திருஅவைக்கான கடப்பாடு போன்றவற்றில் புத்தொளி வீசத்தொடங்கியது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இவரது அருள்பணி வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இவர் அருள்பணியாளராக அருள்பொழிவு ஏற்ற ஒரு சில வருடங்களில், ‘ஆண்டவரைப் புகழ்வோம்’ எனும் தலைப்பில் மலேசியாவில் முதன் முதலில் தமிழில் திருப்பலி புத்தகம் ஒன்றை தயாரித்து வெளியிட்டார் என்பது வரலாற்று உண்மை.

சிறிது காலத்தில் ரோமுக்குச் சென்று இறையியலை ஆழ்ந்து கற்றார். அவருக்கு ஏற்பட்ட உள்ளுணர்வால் அவர் ஆன்மீக பக்கம் ஈர்க்கப்பட்டார். இதன் விளைவாக, அவரது (டாக்டர்) முனைவர் ஆய்வுக் கட்டுரையும் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவரது மூத்த சகோதரரான Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்கள் இவரது ஆற்றலையும் செயல்பாட்டையும் கண்டு வியந்ததுண்டு.

அருட்பணி ஜோன் அவர்கள் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த காலத்தில் இளையோருக்கான மேய்ப்புப்பணியில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை மறுப்பதற்கில்லை. பின்னர், CHOICE இளையோர் அமைப்பின் வழி சில காலம் அரும்பணியாற்றினார். பல இளையோரை



நல்வழிப்படுத்தி நம்பிக்கை வாழ்வுக்கு கலங்கரை விளக்காக திகழ்ந்தார். அத்தோடு நின்றுவிடாமல், கற்றது கைமண் அளவு என்பதற்கு ஏற்ப, மேல் படிப்புக்கு அமெரிக்காவின் சிகாகோவுக்குச் சென்று

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்*

# அருள்பணி டாக்டர் ஜோன் ஞானபிரகாசம் 'ஞான ஒளி' மறைந்தது

*முதல் பக்கத் தொடர்ச்சி..*

உளவியல் ஆன்மீகம் கற்றார். பின்னர் நாடு திரும்பியதும், அவருடைய போதனைகளில் வித்தியாசம் புலப்பட்டது.

அவ்வேளையில், ஆசியா ஆயர் மன்றம் கொணர்ந்த, 'புதிய முறையில் திருஅவையாகுதல்' கருத்தோட்டம் எங்கும் சூடுபிடிக்கத் தொடங்கிய சூழலில், மலேசிய திருஅவையும் 'புதிய முறையில் திருஅவையாகுதல்' என்பதை ஏற்று தன்னில் மாற்றத்தை ஏற்படுத்த அருள்பணி ஜோன் எடுத்த முயற்சிகள் பல. பல உருவாக்கப் பயிற்சிகளும் கையேடுகளும், சிந்தனை தாள்களும் வெளிவந்ததன் காரணமாக, குறிப்பாக பொதுநிலையினர் வாழ்வில் பழையன மறைந்து புதிய திருஅவை மிளர்ந்தது.

கடந்த சில ஆண்டுகளாக, ஆல்பா எனும் 'ஆங்கிலிக்கன் திருஅவை' பயிற்சியால் கவரப்பட்ட இவர், அதனை கத்தோலிக்கமயாமாக்கினார். இயேசுவை அறிந்திட இது ஒரு சிறந்த உருவாக்கப்பயிற்சி என ஏற்று பல பங்குகளில், பல சிரமங்களுக்கிடையில் நடத்தி வந்தார்.

இவர் பணியாற்றிய பங்குகளில் குறிப்பாக கிள்ளான் புனித லூர்து அன்னை பங்கில், வெகு காலமாக தேங்கிக்கிடந்த கட்டடப்பணிக்கு உயிர்கொடுத்து 'விஸ்மா லூர்ட்ஸ்' எனும் பல்நோக்கு மண்டபத்தை எழுப்பினார்.

கடந்த நவம்பர் 22-ம் திகதி, காலை 10 மணிக்கு, சிரம்பான், புனித மினவுதல் அன்னை ஆலயத்தில், ஏறக்குறைய 40 அருள்பணியாளர்கள் சூழ, தமது மூத்த சகோதரர் Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களோடு பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் இறுதி திருப்பலியைக் கொண்டாடினார். பின்னர், பிற்பகல் ஒரு மணியளவில் காஜாங், கிறிஸ்தவக் கல்லறையில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

'நம் ஒவ்வொருவரின் வாழ்வும் மரணமும் பிறர் வாழ்வில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்' என்றுரைத்து, புனித பவுல் அடிகளின் 'வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் (உரோ 14:8) என்ற ஆழ்ந்த உண்மையை தம் சகோதரரின் பிரியாவிடை பயணத்தில் கூறினார் Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்கள்.

### ஒரு சிலரின் பார்வையில் அருள்பணி டாக்டர் ஜோன்



மறைந்த அருட்திரு டாக்டர் ஜோன் ஞானப்பிரகாசம் அவர்கள் இக்காலத்தில் பேசப்படும் 'சினோடிகல் (synodical) திருஅவைக்கு' முன்னோடியாக விளங்கிய "புதிய முறையில் திருஅவையாக" எனும் எதிர்நோக்கில் மிகவும் ஆர்வம் கொண்டவர். அதன் செயல்பாட்டிற்கும் பொதுநிலையினர் உருவாக்கத்திற்கும் அதிக ஈடுபாடு காட்டியவர்.

*(அந்தோணி இன்னாசி)*



அருள்தந்தை ஜான் ஞானப்பிரகாசம் அவர்கள் மிகவும் ஞானமும், அன்பும் இறைப்பற்றும் உடையவர். அவரை எங்கள் குடும்பத்திற்கு பாத்திமா ஆலயத்தில் இருந்ததிலிருந்து நன்றாக பழக்கம். என்னை எங்கு பார்த்தாலும் அனைவரையும் நலம் விசாரிப்பார்.

*(குளோரியா)*



தந்தை அவர்களை மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்தில் 1996ஆம் ஆண்டில் ஒரு உருவாக்கப் பயிற்சியில் சந்தித்தேன். பொது நிலையினருக்காக அவர் வழங்கிய பல உருவாக்கப் பயிற்சிகளில் பங்கு கொள்ள வாய்ப்பு கிடைத்தது. அ.தி.சமூகங்களைக் கட்டியெழுப்பும் பணியில் என்னை சிறப்பாக வழிநடத்தினார். அ.தி.ச. வளர்ச்சிக்காக அவர் வடிவமைத்த வழிகாட்டி கையேடு இன்னும் நம் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது என்பது பெருமகிழ்வுக்குரியது

*(செம் போஸ்கோ)*



கிள்ளான் புனித லூர்து அன்னை பங்கில், பல ஆண்டுகள் எழுப்பப் படாமல் தேக்கமடைந்த பல்நோக்கு லூர்து மண்டபம் இவரது வருகையால் பூர்த்திப்பெற்றது ஒரு சாதனை என்றே கூற வேண்டும். திருஅவைக்கான தூரநோக்குச் சிந்தனை கொண்டவர் அருள்தந்தை டாக்டர் ஜோன் ஞானபிரகாசம்.

*(K. ஜோன்)*

இவ்வாண்டு, மலேசியா அளவில் ஆல்ஃபா பயிற்சி இவர் மேற்கொண்டபோது, இவருக்கு உறுதுணையாக



நான் பணியாற்றினேன். இவரில் காணப்பட்ட தமிழ் மொழி புலமையும், சரியான கத்தோலிக்க வார்த்தைகள் பயன் படுத்த வேண்டும் என்ற ஆவலும், தட்டிக் கொடுத்து நம் திறமைகளை வெளிக் கொணரும் ஆற்றலையும் கண்டு வியந்தேன்.

*(ஜோசப் சகாய ஆனந்த்)*



அருள்பணி டாக்டர் ஜோன் தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட ஓர் அருள் பணியாளர். துல்லியமானவரும் மறைப் பரப்புப் பணியில் பேரார்வம் கொண்ட வருமாவார்.

*(அருள்தந்தை சூ. தனிஸ்லாஸ்)*

செய்தி : ஆர்.கே.சாமி

**அருள்பணி டாக்டர் ஜோன் ஞானப்பிரகாசம் அவர்களின் திடீர் மறைவால் துயருறும் Msgr ஜேம்ஸ் ஞானப்பிரகாசம் மற்றும் குடும்பத்தார் அனைவருக்கும் 'இறைத்தூதன்' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.**

# மலாக்கா-ஜோகூர் மறைமாவட்டத்தின் வருடாந்திர அருள்பணியாளர்களின் ஆய்வுக்கூட்டம்.

ஜொகூர்: ஜொகூர்-மலாக்கா மறைமாவட்டத்தின் அருள்பணியாளர்களின் ஆண்டு ஆய்வுக்கூட்டம் கடந்த நவம்பர் 16-18 வரை ஆயர் பெர்னர்ட் போல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருள்பணியாளர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான தங்கள் பங்குகளை மதிப்பீடு செய்வதற்கும், அவர்களின் மந்தைகளுக்கான மேய்ப்புப்பணியில் மேலும் சிறந்து பணியாற்றவும், புதிய ஆண்டில் சந்திக்கவுள்ள சவால்களைத் தொடர்ந்து மேற்கொள் வதற்கான வழிவகைகளைக் கண்டறிவதும் இந்த ஆண்டு ஆய்வுக் கூட்டத்தின் நோக்கமாகும்.

மேற்கண்ட கூட்டத்தில், மலாக்கா-ஜொகூர் மறை மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டு 50 ஆண்டுகள் 2023-ல் நிறைவடைவதைத் தொடர்ந்து, பொன்விழாக் கொண்டாட்டம், தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி பணிக்குழுவின் கருபொருள்கள் மற்றும் 2026-ல் நடைபெறவுள்ள மலேசியா மேய்ப்புப்பணி மாநாடு ஆகியவற்றுக்கும் தயாரிப்புப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அந்த மூன்று நாள்களிலும் ஆயர் பெர்னர்ட் போல் அவர்கள், வரையறை (Define), கண்டுபிடி (Discover), கனவுகாண் (Dream), வடிவமை (Design), நோக்கு (Destiny) எனும் ஐந்து



நிலைப்பாடுகளின் அடிப் படையில் கூட்டத்தை வழிநடத்தினார். குரு முதல்வர்களான அருள்தந்தை மைக்கல் மண்ணாயகம் அவர்கள் 'அனைத்தும் புகழும் உமக்கே, இறைவா' நடவடிக்கைத் திட்ட மேம்பாடு (Laudato Si Action Platform) குறித்தும் விரிவாக



விளக்கமளித்தார். தொடர்ந்து, கத்தோலிக்க சமூகத்தில் ஆற்றலும் பலவீனமும், பங்குகளின் மதிப்பீடு போன்றவற்றிலும் இந்த ஆய்வுக் கூட்டம் கவனம் செலுத்தியது.

# வருவேன் என்றவர் வருவார்! விழித்திருப்போம்!

இன்று நாம் திருவருகைக் காலத்தைத் தொடங்கியிருக்கின்றோம். இந்த திரு வருகை காலத்தின் முதலாம் ஞாயிற்றுக் கிழமை வாசகங்கள் யாவும் மெசியாவின் வருகையைக் குறித்தும் அவருடைய வருகைக்காக நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்தும் பேசுகின்றன.

இன்றைய நற்செய்தியில் 34ஆம், 35ஆம் வசனங்களில் இரண்டு முக்கிய செய்திகள் நமக்குப் பகிரப்படுகிறது. முதலாவது 'உலகிற்கு என்ன நேருமோ என எண்ணி மனிதர் அச்சத்தினால் மயக்க முறுவர்', இரண்டாவது 'எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்' என்பன வாகும்.

ஆம், இயற்கை வழியாகவும் வரலாற்று நிகழ்வுகள் மூலமாகவும், தனிப்பட்ட சமூகங்களாக வாழும் மனிதர்கள் வழியாகவும், இறைவார்த்தை வழியாகவும் நமக்கு பல எச்சரிக்கைகள் வந்தவாறு உள்ளன என்பதை நாமறிவோம்.

இவற்றோடு, நில நடுக்கம், வெள்ளம், புயல், தீ, தீவிரவாதம், இனக்கலவரங்கள், அரசியல் மாற்றங்கள் என இன்னும் பலவகையில் மனிதர்கள் இன்னல்களில் சிக்குண்டு தவிப்பதும் போராடுவதும் வெள்ளிடைமலை.

இந்நிலையில், "உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும், ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்து, எச்சரிகையாய் இருங்கள். மண்ணுலகம் எங்கும் குடியிருக்கும் எல்லாரும் தீர்புக்குள்ளாகும் அந்நாள் வந்தே தீரும் என நாம் எச்சரிக்க ்படுகிறோம். ஆகையால் நிகழப்போகும் அனைத்திலி ருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்" என நாம் அழைக்கப்படுகிறோம்.

இன்றைக்கு மனிதர்கள் அனைவரும் இன்றோடு வாழ்க்கை முடிந்துவிடப் போகிறது என்பதுபோல் மனம்போனவாறு, உலகப்போக்கிலான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்பவர்கள் திடீரென்று ஆண்டவருடைய வருகை நிகழும்போது அதற்கேற்ற தண்டனையைப் பெறுவர் என்பது உறுதி. எப்படி நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முன்பாக மக்கள் உண்டு குடித்து மனம்போன போக்கில் வாழ்ந்ததினால் அழிந்தார்களோ அதுபோன்று, கடவுளைத் தேடாமல், அவருக்கு ஏற்புடையதை நாடாமல் நாம் வாழ்கின்றபோது அழிவுறுவோம் என்பது உறுதி.

ஆகவே திருவருகைக் காலத்தைத் தொடங்கியிருக்கின்ற இந்த வேளையில், நாம் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுகின்ற, மக்களுக்கு விடுதலையையும் பாதுகாப்பையும் தருகின்ற, மக்களிடத்தில் அன்பைப் பெருகச் செய்கின்ற (இரண்டாம் வாசகம்) மெசியாவின் வருகைக்காக நம்மையே நாம் தயார் செய்ய (விழித்திருந்து) இறைவேண்டல் செய்கின்ற மக்களாகவும், கடவுளுக்குரிய காரியங்களை நாடுகின்ற மக்களாகவும் மாறுவோம். அதன்வழியாக இறைவன் தருகின்ற முடிவில்லா வாழ்வைக் கொடையாகப் பெறுவோம். இயேசுவின் பிறப்பு விழாவை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.

*-ஆவி. டேவிட், குளுவாங்*

**திருவருகைக் காலம் முதலாம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எதே 33: 14-16 |
| தி. பாடல்: | திபா 25: 4-5ab. 8-9. 10,14 |
| 2ம் வாசகம்: | 1தெச 3: 12- 4: 2 |
| நற்செய்தி: | லூக்கா 21: 25-28, 34-36 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 1